## நிரந்தரப்பதிவு குறித்து அடிக்கடி விண்ணப்பதாரர்களால் கேட்கப்படும் கேள்விகள்

1. **நிரந்தரப்பதிவு கட்டாயமா?**

   ஆம், தேர்வாணையத்தினால் வெளியிடப்படும் அறிவிக்கைகளுக்கான தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க, நிரந்தரப்பதிவு அவசியம். நிரந்தரப்பதிவு இல்லாமல் எந்த ஒரு தேர்வுக்கும் விண்ணப்பிக்க முடியாது.

2. **நிரந்தரப்பதிவு செய்தால் மட்டும் போதுமா? நிரந்தரப்பதிவே அனைத்து தேர்வுகளுக்கான விண்ணப்பம் ஆகுமா?**

   இல்லை. நிரந்தரப்பதிவு என்பது உங்களது அடிப்படை விவரங்களை பெற்று உங்களுக்கென ஒரு கணக்கை தொடங்க மட்டுமே. இது எந்தவொரு தேர்வுக்கான விண்ணப்பமும் அல்ல. நிரந்தரப்பதிவுக்கு பின்னர் ஒவ்வொரு தேர்வுக்கும் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும்.

3. **நிரந்தரப்பதிவு இலவசமானதா?**

   இல்லை. நிரந்தரப்பதிவுக்கட்டணமாக ரூ. 150/- செலுத்த வேண்டும்.

4. **ஒரு முறை ரூ. 150/- செலுத்தினால் போதுமா?**

   நீங்கள் செலுத்தும் 150 ரூபாய் கட்டணம் 5 வருடங்களுக்கு செல்லுபடியாகும். அதன் பின்னர் மீண்டும் உரிய கட்டணம் செலுத்தி, பதிவினை புதுப்பிக்க வேண்டும்.

5. **நிரந்தரப்பதிவு செய்வதற்கான இணையதள முகவரிகள் என்ன?**

   www.tnpscexams.net மற்றும் www.tnpscexams.in

6. **நிரந்தரப்பதிவு செய்ய என்னென்ன விவரங்கள் வேண்டும்?**

   உங்களின் புகைப்படம், கையொப்பம், 10 ஆம் வகுப்பு சான்றிதழ், ஜாதிச்சான்றிதழ், கட்டணம் செலுத்த கிரிடிட் / டெபிட் கார்டு / இணைய வங்கி சேவை.

7. **நிரந்தரப்பதிவுக் கட்டணத்தை கிரிடிட் / டெபிட் கார்டு / இணைய வங்கி சேவை மூலமாக மட்டும் தான் செலுத்த முடியுமா?**

   இல்லை. பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்துச்சீட்டு மூலமாகவும் செலுத்தலாம்.

# நிரந்தரப்பதிவு குறித்து அடிக்கடி விண்ணப்பதாரர்களால் கேட்கப்படும் கேள்விகள்

8. ஒருவர் எத்தனை நிரந்தரப்பதிவு செய்யலாம்?

   ஒருவர் ஒரே ஒரு நிரந்தரப்பதிவு மட்டுமே செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட நிரந்தரப்பதிவுகள் செய்தால் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட வாய்ப்புள்ளது.

9. நிரந்தரப்பதிவில் செய்த பதிவுகளை மாற்ற முடியுமா?

   மின்னஞ்சல் முகவரி, கைபேசி எண், வீட்டு முகவரி போன்ற தெரிவுகளைப் பாதிக்காத விவரங்களை மட்டுமே விண்ணப்பதாரர்கள் அவர்களே மாற்றிக்கொள்ளலாம். இதர விவரங்களை மாற்ற வேண்டுமெனில், தேர்வாணையத்திற்கு மின்னஞ்சல் அனுப்ப வேண்டும்.

10. விவரங்களை மாற்ற என்ன தகவல்களை அனுப்ப வேண்டும்? எந்த மின்னஞ்சலுக்கு அனுப்ப வேண்டும்?

    contacttnpsc@gmail.com என்ற முகவரிக்கு கீழ்கண்ட விவரங்களை அனுப்ப வேண்டும்.

    - ✓ பயனாளர் குறியீடு
    - ✓ பெயர்
    - ✓ பிறந்த தேதி
    - ✓ பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி
    - ✓ பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்
    - ✓ தொடர்புகொள்ள வேண்டிய கைபேசி எண்
    - ✓ மாற்றம் செய்யப்பட வேண்டிய விவரம்
    - ✓ ஸ்கேன் செய்யப்பட்ட உரிய ஆவனங்கள்

    மேற்படி விவரங்கள் இல்லாத மின்னஞ்சல் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட மாட்டாது. பதிவு செய்யாத மின்னஞ்சல் முகவரியிலிருந்து பெறப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

11. வேறு ஒருவரின் மின்னஞ்சல் மற்றும் கைபேசி எண் ஆகியவற்றை பதிவு செய்யலாமா?

    கூடாது. தேர்வாணையம் அனைத்து தகவல்களையும் நீங்கள் பதிவு செய்த மின்னஞ்சல் மற்றும் கைபேசி எண்ணுக்கு மட்டுமே அனுப்பும். எனவே மற்றவர்களது மின்னஞ்சல் மற்றும் கைபேசி எண் ஆகியவற்றை பதிவு செய்தால் தேர்வாணையம் அனுப்பும் செய்திகள் உங்களுக்கு தெரியாமல் போகும். எனவே உங்களது அல்லது உங்களது பெற்றோரின் மின்னஞ்சல் மற்றும் கைபேசி எண்-ஐ மட்டுமே பதிவு செய்யவும்.

12. அனைத்து கல்வித்தகுதிகளையும் நிரந்தரப்பதிவில் பதிவு செய்ய வேண்டுமா?

இல்லை. 10 ஆம் வகுப்பு விவரங்களை மட்டும் பதிவு செய்தால் போதுமானது. இதர கல்வித்தகுதிகளை நீங்கள் குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிக்கும் போது அத்த விண்ணபத்தில் தெரிவித்தால் போதுமானது.

13. பயனாளர் குறியீடு (*USER LOGIN ID*) மற்றும் கடவுச்சொல் (*PASSWORD*) மறந்துவிட்டால் என்ன செய்வது? தேர்வாணையத்திற்கு மின்னஞ்சல் அனுப்பலாமா?

பயனாளர் குறியீட்டினை மீட்டெடுக்கவும், கடவுச்சொல்லினை மாற்றியமைக்கவும் "***Forgot Password***" மற்றும் "***Forgot Login ID/OTR ID***" என்ற இணைப்புகளை பயன்படுத்திக்கொள்ளவும். எனவே விண்ணப்பதாரர்களே அவர்களது பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை மீட்டெடுக்கலாம். தேர்வாணையத்திற்கு மின்னஞ்சல் அனுப்பத்தேவை இல்லை.

14. நிரந்தரப்பதிவுக்கட்டணம் செலுத்தி வங்கியிலிருந்து பணம் எடுக்கப்பட்ட பின்னரும் நிரந்தரபதிவு தொடங்கப்படவில்லை எனில் என்ன செய்ய வேண்டும்?

பணம் செலுத்திய பின்னரும் நிரந்தரபதிவு தொடங்கப்படவில்லை எனில் *OTR Payment Verification* என்பதை கிளிக் செய்து உரிய விவரங்களை உள்ளீடு செய்தவுடன் வரும் பணப்பரிமாற்றத்தின் எதிரே இருக்கும் *Submit* என்ற பட்டனை ஒவ்வொன்றாக கிளிக் செய்யவும். எந்த பரிமாற்றத்தில் *Successful* என்று வருகிறதோ அதனை *Update* செய்யவும். பின்னர் உங்களது நிரந்தரப்பதிவில் நுழையவும்.